PR.NO: 3.

நாள் : 02.05.2017

திருநெல்வேலி மாவட்டம்

மீன்வளத்துறை பத்திரிகை செய்தி

அலுவலக உதவியாளர் காலியிடம் நிரப்பிட விண்ணப்பம் கோரும் அறிவிப்பு

ந.க.எண்.2263/ஆ1/2016 நாள் 28.4.2017

மீன்வளத் துறையில் திருநெல்வேலி மாவட்டத்தில் காலியாகவுள்ள 1 அலுவலக உதவியாளர் பணியிடத்தினை பூர்த்தி செய்திட தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. விண்ணப்பத்துடன் கல்விச் சான்று, சாதிச் சான்று, இருப்பிடச் சான்று, ஆதரவற்ற விதவைக்கான சான்று மற்றும் வேலைவாய்ப்பிற்கான பதிவு அட்டை ஆகியவற்றின் சான்றிடப்பட்ட நகல்களுடன் 11.05.2017 அன்று மாலை 5.00 மணிக்கு முன்னதாக மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), பழைய தாலுகா அலுவலக கட்டிடம், இராதாபுரம்–627 111, (தொலைபேசி எண். 04637–254183) என்ற முகவரியில் அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த அலுவலக உதவியாளர் காலியிட நியமனத்திற்கு விபரங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| கல்வித் தகுதி | : | 1) எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>2) மிதிவண்டி ஓட்ட தெரிந்திருக்கவேண்டும். |
| வயது | : | 01.07.2016 அன்று 35 வயது. |
| ஊதிய விகிதம் | : | Rs.4800-10000+GP1300 |
| நியமன இன சுழற்சி | : | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) ஆதரவற்ற விதவைக்கானது |
| பணி | : | அலுவலகம் தொடர்பான பணிகள் |

மேலும் கூடுதல் விபரங்கள் தேவைப்படின் மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டு அறிந்துகொள்ளலாம். நேர்முக தேர்வுக்கான இடம் மற்றும் நாள் குறித்து விண்ணப்பதாரருக்கு பின்னர் தெரிவிக்கப்படும்.

28/4/17

மீன்துறை இணை இயக்குநர்
(மண்டலம்), தூத்துக்குடி

வெளியீடு.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.